**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.31/2025**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கதிர்வேல் |
| தகப்பனார் / கணவர் | .. | கார்த்திகேயன் |
| வயது | .. | 42 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | மோரணம் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 25.12.2022 தேதிய பிரதிவாதி வாதிக்கு ரூ.1,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு எழுதி கொடுத்த பாண்டு அசல் வா.த.சா.ஆ.1, 28.01.2025 தேதிய பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் குறித்து தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.த.சா.ஆ.2, பிரதிவாதி வாதி தரப்பில் அனுப்பிய சட்ட அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்காக Track Consignment நகல் வா.த.சா.ஆ.3 ஆகும்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**